# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 | தனிப்பட்ட உபயோகத்திற்காக | மலர் - 2 இதழ் 1


அன்புள்ள சகோதர சகோதரிகளே,

புத்தாண்டு நல்வாழ்த்துக்களுடன் 2009 வருடத்திற்கான முதல் எக்கோஸ் இந்தியா செய்திமடலுக்கு வரவேற்கிறோம். இந்த புதிய வருடத்தில் மாஸ்டர் நாம் எடுக்க வேண்டிய தீர்மானம் பற்றி வரையரை செய்ததையும் பார்த்தோம். மாஸ்டரின் உரையின் தொகுப்பு இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. மாஸ்டரின் சமீப கால பயணங்களில் திருப்பூர், மலம்புழா, திருச்சூர், கொல்கத்தா, மற்றும் கரக்பூர் ஆகிய இடங்களுக்கு பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.

அன்பு, மன்னித்தல், பொறுமை, புரிந்துகொள்ளுதல் போன்ற நற்பண்புகளை அப்யாஸிகள் வளர்க்க வேண்டும் என்று மாஸ்டர் அருளிய நற்செய்தியின்படி, இப்பண்புகளை அப்யாஸிகளிடயே பயிரிடுவதற்காக, பல்வேறு மையங்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தன. இந்த இதழில் அப்யாஸி பயிற்சி முகாம்கள், அப்யாஸி நிகழ்ச்சிகள் மற்றும் சமீப வெளியீடுகள் ஆகியவை உள்ளன. SRCM-ன் முதல் ஆசிரமமான திருப்பதி ஆசிரமத்தைப்பற்றி மைய களின் ஒளி (centers of light) பகுதியில் உள்ளது.

2009 மார்ச் இதழின் கட்டுரைகளுக்கு கடைசி நாள் 15-பிப்ரவரி-2009, தகவல் கட்டுரைகள் மற்றும் நிகழ்ச்சியைப் பற்றி பல புகைபடங்களுடன். உங்களுடய மண்டல பொறுப்பாளர் (Zonal-In-Charge) வழியாக எங்களுக்கு அனுப்புங்கள்.

எக்கோஸ் இந்தியா பதிப்பகக்குழு

## மாஸ்டரின் புது வருட அருட்செய்தி

2009

(31- டிசம்பர் 2008 அன்று அருளிய செய்தியிலிருந்து ஒரு பகுதி)

சகஜ மார்கத்தின் அப்யாஸிகளான நாம் மனித வாழ்க்கையில் ஒரே ஒரு இலட்சியம்தான் என்பதை உணரவேண்டும். அந்த இலட்சியம் முதலில் முக்தி நிலை, இரண்டாவது தன்னிலை உணர்தல், மூன்றாவது முழுமையாக தெய்வீகத்துடன் இரண்டற கலத்தல் ஆகும். பாபூஜி மகராஜ் கூறியது போல, இன்றைய உலகில் முக்தி என்னும் இலட்சியத்தை அடைய சகஜ மார்கம் மிக சுலபமான, மிக விரைவான வழியாகும். இந்த மனித வாழ்க்கையின், மனித பரிமாண வளர்ச்சியின் இலட்சியத்தில் மனதை திடமாக வைத்தால், தன்னிலை உணர்தல், தெய்வீகத்துடன் கலத்தல் ஆகிய இலட்சியங்கள் கடினமானதில்லை என்று அவர் வலியுறித்தியுள்ளார். மதம், கலாச்சாரம், கல்வி, சமூகம் மற்றும் நம்மால் உருவான வேறுபாடுகளை நாம் மறந்து, நம் மனதிலிருந்து அகற்ற வேண்டும். நம் அனைவரையும் இந்த மனித வாழ்க்கையில் ஒருங்கிணைப்பது, நிரந்தரமாக மற்ற ஆன்மாக்களைப் போலவே இருக்கும், நமக்குள்ளே இருக்கும் ஆன்மா ஆகும். சமஸ்காரங்களினால் நம் உடல் தவறுகளை செய்கிறது. முன்கணிப்பு மற்றும் பாரபட்சங்களினால் (preconceived notions and prejudices) நம் மனது தவறுகளை செய்கிறது.





ஆகையால் நான் அனைவரையும் ஒரு தீர்மானம் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். ஓ மாஸ்டர், என்னை மன்னிக்க உதவுங்கள். மற்றவர்கள், எனக்கோ மற்றவர்களுக்கோ என்ன செய்திருந்தாலும், நல்லதோ, கெட்டதோ, இறுதியாக தெய்வீக மாஸ்டர் வழி நடத்தும் இந்த உலகின் மனித வாழ்கைநிலை எனும் திருவிளையாடல் என்பதை உணர்ந்து, என் வழியாக மற்றவர்களையும் மன்னித்துவிடுங்கள்.

## பெங்களூர்



மாஸ்டர் துபாயிலிருந்து 31-அக்டோபர் வந்தார். சிறிய அளவிலான அப்யாஸி குழு அவரை வரவேற்றது. பின்னர் சுப என்கிளோவ்விலுள்ள அவருடைய வீட்டிற்கு சென்றார். நவம்பர்-2 ம் தேதி, மாஸ்டர் பெங்களூரின் மூன்றாவது ஆசிரமத்தை திறந்து வைத்து 'பரம்தாம்' என்று பெயரிட்டார். ஆசிரமம் அழகாக வடிவமைக்கப்பட்ட, சிவப்பு செங்கல் கட்டடம். அதில் ஒரு தியானக் கூடம், சமையல் கூடம், நூலகம் மற்றும் அலுவலகம் ஆகியவை அடித்தளத்தில் உள்ளன. மற்ற இரண்டு தளங்களில், அங்கு வசிப்பவர்களுக்காக 32 அறைகளும், இரண்டு விருந்தினர் அறைகளும், இரண்டு தங்கும் அறைகளும் உள்ளன.

சத்சங்கத்திற்குப் பின் மாஸ்டர் உரையாற்றினார். "பரம்தாம் என்றால் இந்நிலைக்குத் திரும்பாத நிலைக்கு கொண்டு செல்லும் ஒரு புகலிடம்". என்றார்.

மாஸ்டர் 12-ஆம் தேதி சென்னை சென்றார். இடையில் நாற்றாம்பள்ளி ஆசிரமத்தில் சிறிது நேரம் தங்கிச்சென்றார்.

## திருப்பூர்

3-டிசம்பர் புதன்கிழமை மாஸ்டர் திருப்பூர் வந்தார். நேராக டைமன்ட் ஜுப்ளி பார்க் - ஆசிரம வளாகத்திற்கு சென்றார். அவர் அங்கு மகிழ்ச்சியாக இருந்தார். அப்யாஸிகளுடன் சிறிது நேரம் பேசினார். ஒரு வாரத்திற்கும் மேலாக மாஸ்டர் அங்கு தங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டதால், அப்யாஸிகள் அவரைக் காண தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

5-டிசம்பர் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு, 200 சதுர அடியில், மணப்பாக்கம் சமையல் கூடத்தைப் போலவே கட்டப்பட்ட, சமையல் கூடத்தை திறந்து வைத்தார். எதிர்பாராத நேரத்தில் வருபவரை 'அதிதி' என்பர் என்றார். அவர்களை மரியாதையுடன் நடத்தவேண்டும். 'அன்னதானம்' மட்டுமே பெறுபவரை திருப்திபடுத்தும் ஒரே தானம். உணவு பறிமாறுபவர்கள் மரியாதையுடன் பெறுபவறுக்குப் பரிமாறவேண்டும். அவர்களை முறையாக அழைக்கவேண்டும். டேபிளில் உணவு பரிமாறி அனைவரையும் ஒன்றாக சாப்பிட அழைப்பதற்கு பதிலாக, அவர்களை தனிப்பட்ட முறையில் அழைத்து கவனிக்க வேண்டும்.

ஞாயிற்றுகிழமை, சத்சங்கத்திற்கு பின், தியானதின்போது, செல்போன்கள் ஒலிப்பது குறித்து மாஸ்டர் உறுதியாக அறிவித்தார். “அப்யாஸிகள் இந்த அளவுகூட ஒழுக்கமாக இல்லையென்றால் ஆசிரமம் வருவதன் பயன் என்ன? செல்போன்களில் பேசும் வேலை இருப்பவர்கள், இங்கு வருவதற்கு பதிலாக வீட்டில் இருந்து போன் பேசிக்கொண்டிருக்கலாம்” என்றார்.



10-டிசம்பர் மாஸ்டர் உடுமலைபேட்டைக்கு சென்றார். உடுமலைபேட்டை அருகிலிருக்கும் கிராமத்தில் 5 எக்கர் நிலத்தை ஆசிரமத்திற்கு அளித்திருந்தனர். மாஸ்டரை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர். மாஸ்டர் அவர்களுடன் நீண்ட நேரம் பேசினார்.

17 டிசம்பர் மாஸ்டர் பாலக்காடு, மலம்புழா, திருச்சூர், சென்றார். கோவையிலிருந்து சென்னைக்கு 20- டிசம்பர் அன்று சென்றார்.

## மலம்புழா

டிசம்பர்-17-20,2008 மாஸ்டர் மலம்புழாவிலிருக்கும் SMSF Retreat Centre வந்தார். இது இந்த மையத்திற்கு மாஸ்டரின் நான்காவது வருகையாகும் முதன் முறையாக Retreat Centre-ல் தங்கினார். 2008 சான்றோர் பயிற்சி முகாம் (Scholarship Training Program) மலம்புழா மையத்தில் நடந்தது. அதனால் உலகமெங்கிலும் இருந்து நாற்பது சான்றோர் மற்றும் ஒருங்கினைப்பாளர்கள், மாஸ்டர் தங்கியிருந்த போது இருந்தனர்.



## திருச்சூர்

புழக்கல், திருச்சூர், கேரளாவில், டிசம்பர் 19, 2008 அன்று “யோகாஸரமம்” என்று பெயரிடப்பட்ட தியான மண்டபத்தை மாஸ்டர் திறந்து வைத்தார். திருச்சூரிலிருந்து 5 கி.மி - ல். திருச்சூர் குன்னம்குளம் ரோட்டில் ஆசிரமம் அமைந்துள்ளது. மாஸ்டர் சத்சங்கம் அளித்த பிறகு உறையாற்றினார். அதில் இதயத்தின் அறிவுரையை ஏற்றுக் கொள்ளும் அவசியத்தை வலியுறுத்தினார். அதனால் நிரந்தர presense என்பது இதயத்தில் உண்மையான eternal presense ஆக மாறும். அதுவே நம் நலத்திறிக்கு ஒரே sinceare வழிகாட்டி நாற்பது வெளிநாட்டு அப்யாஸிகள் உட்பட ஏறக்குறைய ஆயிரம் அப்யாஸிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். சத்சங்கத்திற்கு பிறகு, மாஸ்டர் அவருக்காக ஏற்பாடு செய்திருந்த வீட்டில் அப்யாஸிகளுடன் சிறிது நேரம் இருந்தார். மதிய உணவிற்க்கு பிறகு மாஸ்டர் மலம்புழா, பாலகாட்டிற்க்கு 2.30 மணிக்கு புறப்பட்டார்.




கோவையிலிருந்து சென்னை செல்வதற்க்கு முன்பாக மாஸ்டர், சான்றோர்காளுக்காக (Scholers) , புதிய நூலகத்தில் உறையாற்றினார். “மக்கள் உலகை மாற்றுவதற்காக ஆன்மீக வாழ்கைக்கு வந்தார்கள் என்றால், அவர்காளால் எதையும் சாதிக்க முடியாது. நான் திடமாக சொல்கிறேன். நீங்கள் உங்களை மாற்றுவதற்காக வந்தீர்கள் என்றால், உங்களை மாற்றுவதற்காக முழுவதுமாக நீங்கள் உங்களை செலுத்தினால், அதில் உறுதியாக வெற்றி இருக்கும்” என்றார்.

## கொல்கத்தா



25- டிசம்பர்-2008 அன்று மாஸ்டர் கொல்கத்தா வந்தார். 35 அப்யாஸிகள் அவருடன் விமானத்தில் வந்தனர். 26-ம் தேதி மதியம் அவர் குடிலுக்கு வெளியிலிருக்கும் புல்வெளியில் வந்து அமர்ந்தார். கொல்கத்தா ஆசிரமத்தின் மிக அருமையான சூழ்நிலையைப் பற்றி சொல்லி “நம் ஒவ்வொரு ஆசிரமமும் அமைதி என்னும் பாலைவனச் சோலை” என்றார். ஏன் இது போன்ற உலகத்தை வெளியில் உருவாக்க முடியவில்லை என்பதற்கு, அவர் “பணத்திற்கான பேராசை நாம் முன்பு அனுபவித்த நம்முடைய மகிழ்ச்சி, நிம்மதி, நல்ல உடல்நலம் ஆகியவற்றைப் பறித்துவிட்டது” என்றார்.

29-ம் தேதி, கரக்பூரில் CREST-க்கு அடிக்கல் நாட்டினார். இது இந்தியாவில் பெங்களூருக்கு அடுத்த இரண்டாவது CREST வளாகமாகும். 5 ஏக்கர் வளாகத்தை மாஸ்டர் சுற்றி நடந்து வரும்போது, அவரை தொடர்ந்து வந்த கூட்டத்தை விலக்குவதற்காக, நகைச்சுவையுடன் “ஆன்மீகத்தில் என்னைத் தொடருங்கள், மற்றவற்றில் அல்ல” என்றார். சத்சங்கத்திற்கு பிறகு மாஸ்டர் பேசும் போது, 'பொறுப்பு' என்ற தலைப்பில் பேசினார். அவர் “நம் (SELF) மேல் இருக்கும் பொறுப்பு உலகிலுள்ள மற்ற எல்லா பொறுப்புகளையும் விட மிக மேலானது. என்றார். மதிய உணவிற்கு பிறகு மாஸ்டர் கொல்கத்தா சென்றார். மறுநாள் மதியம் அங்கிருந்து சுமார் நாற்பது அப்யாஸிகளுடன் சென்னை சென்றார்.






# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1


## 2009-க்கான சத்கோல் விண்ணப்பங்கள்


2009ம் ஆண்டுக்கான விண்ணப்பங்களை http://www.srcm.info/satkhol/satkhol_home.htm இணையதளத்தில் தற்சமயம் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனவரி முதல் மார்ச் (குழு 249 முதல் 259) வரை சத்கோல் செல்ல விரும்புபவர்கள், இணையதளத்தின் மூலம் தற்சமயம் விண்ணப்பிக்கலாம். ஏப்ரல் முதல் ஜுன் (குழு 260 முதல் 271 )வரை செல்வதற்கான விண்ணப்பங்கள், ஜனவரி10,2009 முதல் இணையதளத்தில் கிடைக்கப் பெறலாம். செப்டம்பர் முதல் டிசம்பர்(குழு 272 முதல் 281 )வரை செல்வதற்கு, ஜுன் 10, 2009 முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.


குறிப்புகளைக் கவனமாகப் படித்துவிட்டு, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யவும்.

இணையதளவசதி இல்லாதவர்கள், தங்களது பிரிசெப்டர், மையப்பொறுப்பாளர் அல்லது மண்டலப்பொறுப்பாளர், உதவியை நாடவும். மேலும் விவரங்களுக்கு, சத்கோல் நிர்வாக அலுவலகத்தை, காலை 10 முதல் 12 மணி வரையிலும், மாலை3 முதல் 4.30 மணி வரையிலும், 044 2252 1099 அல்லது 044 4217 1111 என்ற தொலைபேசி எண்கள் மூலம் தொடர்பு கொள்ளவும்.


## புதிய பதிப்பக வெளியீடுகள்





1, ஜனவரி 2009 அன்று, "சகஜ மார்க கோட்பாடுகள் - பாகம் 14" என்ற புத்தகத்தை மாஸ்டர் வெளியிட்டார். இந்த புத்தகத்தில் 1991 முதல் அரையாண்டில் மாஸ்டர் அவர்கள் ஆற்றிய 25 சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன. 320 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகத்தில் நோக்கம், தன்னார்வ தொண்டு, தலைமைப்பண்பு மற்றும் மாஸ்டர் போன்ற பரவலான சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன.




1987ல் பதிப்பிடப்பட்ட மரத்தின் கனி என்ற புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு ஜனவரி 1, 2009-ல் வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் சொற்பொழிவுகள், கேள்விகள் மற்றும் அவற்றிற்கு மாஸ்டரின் பதில்கள் போன்றவற்றை கொண்டுள்ளது. இந்த சொற்பொழிவுகள் மாஸ்டர் அவர்களால் இத்தாலி, அமெரிக்கா மற்றும் ஜெர்மனியில் 1986-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை வழங்கப்பட்டவை ஆகும்.




"இதய வாக்கு 2006" என்ற மராத்திய மொழிபெயர்ப்பானது 2006-ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை மாஸ்டர் அவர்களால் இந்தியாவின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிநாடுகளில் வழங்கப்பட்ட சொற்பொழிவுகளை முழுமையாக கொண்டுள்ளது. இதில் திருப்பூர், பெங்களூர், சென்னை, அஹமதாபாத், கான்பூர், ஹைதராபாத், பூனா, ராய்ப்பூர், ரோம், டென்மார்க், ஜெர்மனி, பிராக், துபாய், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் மாஸ்டர் வழங்கிய தகவல்கள் அடங்கியுள்ளன.




ஜனவரி 2009க்குரிய "நிலையான நினைவு" பதிப்பு விரைவில் விநியோகிக்கப்படும். ஏப்ரல் 2009 பதிப்பிற்கான தலைப்பு "நன்றிக்கடன்". இந்த தலைப்பு பற்றிய உங்களது கருத்துக்கள் மற்றும் சகஜ மார்க்கப் பயிற்சியின் மூலமாக உங்களது உள்ளார்ந்த பார்வைகள் பற்றிய கருத்துக்கள் வரவேற்க்கபடுகின்றன. அவற்றை cr@srcm.org என்ற இணையத முகவரிக்கு 1, பிப்ரவரி 2009க்குள் அனுப்பி வைக்கவும்.

## மணப்பாக்கம் ஆசிரமத்தில் வெள்ளப்பெருக்கம்

நவம்பர் 26 அன்று, வங்காள விரிகுடா கடலிலிருந்து வந்த ஒரு புயலின் காரணமாக மழை பொழிய ஆரம்பித்தது. மாலையில் மழை மிகவும் வலுவானது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஆசிரமத்தில் வசிக்கும் அனைவரையும் ஆசிரமத்திற்குட்பட்ட பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்ததுடன், பெரும்பாலான பொருள்கள் பாதுகாக்கும்பொருட்டு உயரமான இடங்களுக்கு நகர்த்தப்பட்டன.

நவம்பர் 27 மாலையில், ஆசிரமத்தில் உள்ள அனைவரும் வெளியேற்றப்பட்டு எதிரில் உள்ள கார்டன் ஆப் ஹார்ட்ஸ் வீடுகளில் அப்யாசிகளுடன் தங்க வைக்கப்பட்டனர். நள்ளிரவின்போது, ஆசிரமத்திற்குட்பட்ட சகஜ ஆற்றில் பாலம் வரை தண்ணீர் வந்ததுடன் மேலும் அபாயகரமாக உயர்ந்த வண்ணம் இருந்தது. இரவு 1.30 மனியளவில் லயன் கேட் சுவர் இடிந்ததுடன் சில நிமிடங்களில் காட்டேஜில் ஒன்றரை அடி வரை தண்ணீர் நிரம்பியது. பழைய மருத்துவமையம் அருகில் ஆசிரமம் முழுவதும் 10 அடி வரை வெள்ளத்தால் மூழ்கியது.

28 அன்று காலை வரையிலும் கூட மழை குறையவில்லை. அருகில் உள்ள ஏரிகள் மற்றும் அடையார் ஆறு ஆகியவை முழுவதும் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. மதிய வேளையில் கட்டு மரங்கள் (ராயபுரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுடன்) மற்றும் ஒரு இரப்பர் டின்ஜி (கப்பல்படை அதிகாரிகளுடன்) ஆசிரமத்திற்கு வரவழைக்கப்பட்டன. மீனவர்கள் மற்றும் கப்பல்படை அதிகாரிகள் விரைவாக பணிபுரிந்து 50 நபர்களை ஆசிரமத்திற்க்குட்பட்ட வெள்ளத்தால் மூழ்கிய அவர்களின் வீடுகளில் இருந்து மீட்டனர்.

29 அன்று, தியானக்கூடத்தை சுற்றியிருந்த தண்ணீர் வழிய ஆரம்பித்தது. மாஸ்டர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். அவர் ஆசிரமத்தை சுற்றி வந்து காயத்ரி செல்வதற்கு முன் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டார். 3-ஆம் தேதியன்று, மாஸ்டர் திருப்பூருக்கு புறப்பட்டார்.

பின்னர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து தன்னார்வ தொண்டர்கள் வெள்ள பாதிப்பு மீட்பு பணியில் கலந்து கொள்ள குழுமினர். அவர்கள் தங்கும் விடுதி, சமையலறை, கழிவறைகள் மற்றும் இதர பகுதிகள் முழுவதையும் சுத்தப்படுத்தினர். இந்த சமயத்தின்போது ஆசிரம செயல்பாடுகள் முற்றிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

மாஸ்டர் டிசம்பர் 31 அன்று மீண்டும் சமையற்கூடம் மற்றும் சிற்றுண்டி சாலையை அப்யாசிகளுக்கு மத்தியில் திறந்து வைத்தார். மாலையில் இசை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்பாராத விதமாக மாஸ்டர் நள்ளிரவின் போது சத்சங்கம் நடத்தினார். அவர் காலை 9.00 மணியளவில் சத்சங்கம் நடத்தியதுடன் ஒரு சொற்பொழிவும் ஆற்றினார். கூட்டு முயற்சியின் விளைவாக, ஆசிரமம் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்டு அப்யாசிகளுக்காக மீண்டும் வரையறுக்கப்பட்ட வழிமுறைகளுடன் திறந்து வைக்கப்பட்டது.

Master's Cottage



Dining Area



# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1


## முதுநிலை பயிற்சி முகாம் - ஜெய்ப்பூர்

30, நவம்பர் 2008 அன்று ஜெய்ப்பூரில் உள்ள மண்டல ஆசிரமத்தில் ஒரு நாள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 10-க்கு மேற்பட்ட மையங்களிலிருந்து கடந்த ஒரு ஆண்டு காலமாக பயிற்சி செய்து வரும் சுமார் 85 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இதில் நிலையான நினைவு, மிஷன் புத்தகங்களை படிப்பதன் அவசியம், நேர்மையாக இருப்பதன் அவசியம் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கு சரியான நடத்தையின் முக்கியத்துவம் போன்றவை பற்றியும் தன்னிலைமாற்றம், தன்னார்வத் தொண்டர்களின் பங்கு மற்றும் தினந்தோறும் பயிற்சியை செய்வதில் ஏற்படும் இடர்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டன. அஜ்மீர் மைய அப்யாசிகள் புதிய ஆர்வலர்களுக்கு சகஜ மார்க்கத்தை எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்பது பற்றியொரு குறுநாடகம் நடத்திக்காட்டினர்.

## புதிய அப்யாசிகளுக்கான பயிற்சித்திட்டம், பரோடா



ஆரம்பகால அப்யாசிகளுக்கான பயிற்சித்திட்டம் 19, அக்டோபர் 2008 ஞாயிற்றுக்கிழமையன்று வடோதரா ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. சகஜ மார்க்கப் பயிற்சியின் அடிப்படைகள் பற்றி உணர்த்துவதே இந்த அரை நாள் நடைபெற்ற நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது. பங்கேற்பாளர்களிடம் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் அனைவரும் பங்கேற்குமாறு நீண்ட நேரம் நடத்தப்பட்ட பகுதிகள் நிகழ்ச்சியை மிகவும் சுவாரசியமாக்கின. கலந்துரையாடல்கள், செயல் விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சி பற்றி பங்கேற்பாளர்களின் கருத்துகள் போன்றவை இடம்பெற்றதால் இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைந்தது.

## ஷாஜஹான்பூரில் சாதனா நிகழ்ச்சி



12-16, நவம்பரில் ஷாஜஹான்பூர் மையப்பொறுப்பாளர் சகோதரர் சர்வேஸ் சந்திரா அவர்களால் முதல்முறையாக ஹிந்தியில் நடத்தப்படும் சாதனா பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டது. மேலும் அவர் பேசும்போது, ஷாஜஹான்பூர் ஆசிரமத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறியதுடன் பாபூஜீ மற்றும் நமது மாஸ்டர் கூறியுள்ளபடி ஒவ்வொருவரும் முன்னேறும் நோக்கத்துடன் செயல்பட வேண்டும் என்றும் கூறினார். அப்யாசிகள் தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்து கொள்ளவும், தங்களை உள்ளபடியே ஏற்றுக்கொள்ளவும், தன்னிலைமாற்றத்தை துவங்கும்பொருட்டும் தங்கள் வாழ்க்கையில் நடந்த 5 நேர்மறையான மற்றும் எதிர்மறையான நிகழ்வுகளை எழுதும்படி ஊக்குவிக்கப்பட்டனர்.

அப்யாசிகள் அனைவரும் 6 குழுக்களாக பிரிந்து தங்களது கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். அக்கருத்துக்கள் குழு உறுப்பினர் ஒவ்வொருவரால் தொகுக்கப்பட்டு அனைவர்க்கும் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தொகுப்புரையும் அப்யாசிகள் கேள்விகளுக்கு பதில்களும் வழங்கினர்.

## அப்யாசிகளுக்கான பயிற்சி செயல்முறைத்திட்டம் - பைதான்

9, நவம்பர் 2008 அன்று பைதானில் அப்யாசிகளுக்கான ஒரு பயிற்சித்திட்டம் நடத்தப்பட்டது. இது இந்த மையத்தில் முதன்முதலாக நடத்தப்பட்ட ஒரு திட்டம் ஆகும். இதில் பைதான், அஹமத் நகர் மற்றும் அருகாமையிலிருந்த மையங்களிலிருந்து சுமார் 143 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இதில் சகஜ மார்கம்-ஓர் அறிமுகம், தியானம், சகஜ மார்க்க மாஸ்டர்கள், சுத்திகரிப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் போன்ற தலைப்புகள் இடம்பெற்றன. ஒவ்வொரு தலைப்புகளிலும் கணிணி விளக்கப் படங்கள் மூலம் அனைத்துப் பேச்சாளர்களும் சிறப்பாக விளக்கமளித்தனர். ஆதலால், பங்கேற்பாளர்களால் கோட்பாடுகளைத் தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது. இந்த நிகழ்ச்சி மும்பை மையத்தைச் சேர்ந்த சகோதரர் துசார் பிரதான் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு பங்கேற்பாளர்கள் நல்ல வரவேற்பு கொடுத்ததுடன் இது அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்ததாக தெரிவித்தனர்.

## அஹமதாபாத்தில் இளைஞர்கள் கருத்தரங்கு




மாஸ்டர் அவர்களின் சமீபத்திய சென்னை உரையில் அவர் அப்யாசி சகோதரர்களிடம் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டதன் தொடர்ச்சியாக "தன்னிடமுள்ள நற்பண்புகளே ஆன்மீக வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை" என்ற கருத்தை மையமாகக் கொண்டு 14, டிசம்பர் அன்று அஹமதாபாத்தில் இளைஞர்கள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இது போன்ற நிகழ்ச்சிகள், இளைஞர்களுக்கு தன்னைத்தானே ஆய்வு செய்து கொள்ளவும், மதிப்பீடு செய்து கொள்ளவும், மேலும் ஒவ்வொருவராலும் கடினமானதாக ஆக்கப்பட்ட தங்கள் வாழ்க்கைச் சூழலில் இருந்து வெளிவரும் வழிகளைக் கண்டுபிடிக்கவும் அடித்தளமாக அமைகின்றன.

டஜன்கள் எண்ணிக்கையில் இளைஞர்கள் தன்னார்வ தொண்டில் ஈடுபட விருப்பம் தெரிவித்ததுடன் அதில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது இந்த கருத்தரங்கின் வெற்றியாகும். இளைஞர்கள் இந்த உற்சாகத்தையும், ஈடுபாட்டினையும் தற்காத்துக்கொள்ளுதல் மிகவும் முக்கியமாகும்.

## அப்யாசிகளுக்கான பயிற்சி செயல்முறைத்திட்டம் - கானாப்பூர், பெல்காம் மாவட்டம்

பெல்காமைச் சேர்ந்த 15 அப்யாசிகளும் புதிய அப்யாசிகளும் பிதாரைச் சேர்ந்த சகோதரர் ராஜூ சுசாம்புகருடன் கானாப்பூரில் ஒரு பள்ளியில் கூடினர். பள்ளியின் முதல்வர் ஒரு அப்யாசியாதலால் அவர் இந்த பயிற்சியை பள்ளியில் நடத்திக்கொள்ள உதவினார்.

இந்நிகழ்ச்சி அப்யாசிகளின் நல்ல வரவேற்பைப் பெற்றது. சகஜ மார்க்கம் பற்றிய தங்களது இணக்கங்களை வெளிப்படுத்தியதுடன் மார்க்கம் பற்றி தெளிவாகப் புரிந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி சத்சங்கத்துடன் தொடங்கியது. முதலில் சகோதரர் வாஸ்ட்ரத் அவர்களின் மாஸ்டரால் மிகவும் விரும்பப்படும் மெல்லிசை இடம்பெற்றது. பின்னர், பயிற்சி கணிணி விளக்கப்படங்களுடன் முறைப்படி நடைபெற்றது. சகஜ மார்க்க பயிற்சி முறை பற்றி பல்வேறு பேச்சாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது. இம்முகாம் மாலை சத்சங்கத்துடன் நிறைவு பெற்றது. இதனால் அப்யாசிகள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் சிலர் மாஸ்டரைப் பார்க்க மிகவும் ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1

## ஆசிரியர்களுக்கான நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி நிகழ்ச்சி



நவம்பர் 7, 2008 அன்று, மகராஷ்டிரா மாநிலம் அஹமத்நகரில் உள்ள ஒரு துவக்கப்பள்ளியில் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி நிகழ்ச்சி ஒன்று மராட்டிய மொழியில் நடைபெற்றது. அவ்விடத்தில் தான் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் நடைபெற்று வருகிறது. இன்றைய சமுதாயத்தில் நன்னெறிகளுக்கான தேவையை வலியுறுத்தி சகோதரர் விஷ்வாஸ்டில்லு பேசினார். பல்வேறு பள்ளிகளில் அணுகும் முறை பற்றியும், ஸ்மிருதியின் அணுகும் முறை பற்றியும் சகோதரர் துஷார்ப்ரதான் விவரமாகக் கூறினார்.

பெரிய நகரங்களை விட சிறிய பட்டணங்களில் நல்லொழுக்க முறைகள் சற்று மேலான அளவில் பின்பற்றப்படுகின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. ஆனால் தொலைக்காட்சி மற்றும் பல்வேறு சாதனங்களின் வருகையால் சிறிய பட்டணங்களில் கூட நன்னெறிகளைக் காப்பதற்கான அவசியம் மிகவும் முக்கியமான ஒன்றாக ஆகிவருகிறது என்பது நம் குழுவினர் அனுபவபூர்வமாக அறிந்த ஒன்று.

தங்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் சகதோழர்களால் எதிர்மறையான போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் தள்ளப்படுகிறார்கள் என்ற விஷயம் தான் சொற்பொழிவின் முக்கிய அம்சமாக இருந்தது. மனித வாழ்வில் நல்லொழுக்கங்களைப் பாதுகாத்து, இன்றைய அவசரமான அழுத்தங்கள் நிறைந்த அன்றாட வாழ்க்கையில் சம நிலை பெற வேண்டிய அவசியம் குறித்து மிக முக்கியமாக வலியுறுத்தப்பட வேண்டும். நன்னெறிகள் கற்றுக்கொடுக்கப்பட்டால், அவை பின்பற்றப்படமாட்டாது என்று ஒரு வழக்கு உண்டு. ஒரு குழந்தையின் குணநல அமைப்புக்களை உருவாக்குவதில், ஆசிரியர்கள் மிக முக்கியமான பங்கேற்கிறார்கள். மாணவர்கள், அவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கட்டிக் காப்பது ஆசிரியர்களின் மிகப் பெரிய பொறுப்பாகிறது.

சில செய்முறைகள், பரிசோதனைகள், மற்றும் கதைகள் கூறப்பட்டு, அவைகளை நன்னெறிகளைப் போதிப்பதில் எவ்வாறு இணைப்பது என்றும் செயல்படுத்திக் காண்பிக்கப்பட்டது. சொற்பொழிவைத் தொடர்ந்து, வினா விடைப்பகுதி நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்த ஸ்மிருதி குழுவினருக்கு, பள்ளி முதல்வர் மற்றும் பொறுப்பாளர்கள் நன்றி தெரிவித்தனர். பள்ளி ஆசிரியர்களுள் ஒருவர், மிகவும் நெகிழ்வான நன்றியுரை ஆற்றினார்.

### முக்கியச்செய்தி

மாஸ்டரின் தனிப்பட்ட உரையாடல்கள், மற்றும் சொற்பொழிவுகளை, அப்யாசிகள் அதிகாரபூர்வமாக அனுமதி பெற்றால் அன்றி, சொந்தமாக ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யக்கூடாது. மேலும் இணையதளத்தில் தனிப்பட்ட உரையாடல்கள், கூட்டங்கள் முதலியவற்றைப் பதிவு செய்து வெளியிடுவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



## ராணிகஞ்ச்-இல் ஆசிரியர், மாணவர்களுக்கான நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி

ஞான பாரதி பள்ளியில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நவம்பர் 14,15ஆம் தேதிகளில், ராணிகஞ்ச் மையத்தில், ஆசிரியர், மாணவர்களுக்கான நிகழ்ச்சி ஒன்று எற்பாடு செய்யப்பட்டது. அன்டாலைச்சேர்ந்த சகோ.அனில், சகோ.பங்கஜ்ரஜக், சகோ.விஜய்சௌத்ரி, சகோ.சுஷாந்த், மற்றும் சகோ.சேகர் ஆகியோர் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை உள்ள சுமார் நானூறு மாணவர்கள், இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ந்தனர். பள்ளி முதல்வரும் பொறுப்பாளரும், நிகழ்ச்சி முழுவதும் இருந்து பங்கேற்றனர். முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களிடம் இருந்து நிகழ்ச்சியைப் பற்றிய கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு, பள்ளி முதல்வரிடம் கொடுக்கப்பட்டது. அவற்றில் பள்ளியின் முன்னேற்றத்திற்கு இத்தகைய நிகழ்ச்சிகள் மிகவும் தேவை என மாணவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். நன்னெறி அடிப்படைக்கல்வியைப் பற்றிய ஸ்மிருதியின் கருத்துக்கள் பலவும் மின் விளக்கப்படங்கள் மூலமாகவும், பரிசோதனைகள் மூலமாகவும் எடுத்துரைக்கப்பட்டன.

மறுதினம் ஆசிரியர்களுக்காக நடந்த கூட்டத்தில், ஸ்மிருதியின் கருத்துக்கள், மின்விளக்கப்படங்களாகவும், பரிசோதனைகள் மூலமாகவும் கூறப்பட்டன. அனைவரும் இந்நிகழ்ச்சி மிகவும் பயன் உள்ளதாக இருப்பதை உணர்ந்தனர். இன்னும் சிறந்த மனிதர்களாக மாறவும், அதன் மூலம் சிறந்த ஆசிரியர்களாக ஆகவும் முயற்சி செய்யப்போவதாகப் பலரும் கூறினர்.

பெற்றோர்களுக்கு நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி பற்றி ஒரு அறிமுகம்.-- ராஞ்சி மையம்.

நவம்பர் 15, 2008 அன்று, ராஞ்சி லால்பூரில் உள்ள ஒரு குடியிருப்பு வளாகத்தில் சுமர் முப்பது பெற்றோர்களுக்கு விபிஎஸ்சி பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. நமது மிஷனின் விபிஎஸ்சி பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்களைப் பகிர்ந்து கொண்டு, குழந்தைகளின் மனதில் நன்னெறிகளைப் பதிய வைப்பதில், அவர்களுக்கான் பங்கு என்ன என்பதை உணர வைப்பதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

சகோதரி சுநந்தா சௌஹான், சகோ.அனிதா திவாரி, சகோ.அனுராதா சௌஹான் சகோ. அருண்குமார்லால், சகோ.பாவன்ஸஹாய், மற்றும் சகோ.மனோஜ்திவாரி ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெளிவாகக் கூறி, இவ்விஷயத்தை அறிமுகப்படுத்தினார்கள். பரிசோதனைகளின் மூலம் நன்னெறிகளைப்புரிய வைக்கும் பகுதியானது, நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக இருந்தது.

நிகழ்ச்சியின் பலனாக பங்கேற்றவர்களில் ஒருவர் உடனடியாக பயிற்சியை ஆரம்பித்தார். பார்வையாளர்களாக வந்திருந்தவர்களில், மூன்று ஆசிரியர்களும் இருந்தனர். இவ்வாறு ஒரு நன்னெறி அடிப்படையிலான கல்விப் பயிற்சி முகாம் இருப்பது பற்றிய செய்தியை தங்கள் பள்ளிகளுக்கும் எடுத்துச்சென்றனர். இந்த கலந்துரையாடலின் விளைவாக, இன்னும் பல பள்ளிகளிலும் பயிற்சி வகுப்புகள் நடக்கலாம் என ராஞ்சி மையத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.



# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1


## டியோரியா ஆசிரம திறப்பு விழா



டியோரியா (உ.பி.) என்னும் இடத்தில் ஒரு ஆசிரமம் நிறுவப்பட்டுள்ளது. அப்யாசி சகோதர, சகோதரிகள் இணைந்து, நிதி திரட்டி, மற்றும் ஆசிரம வேலைகளில் பங்கெடுத்துக்கொண்டு அதை நிறைவு பெறச்செய்தனர்.

ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி, சகோ.யூ.எஸ்.வாஜ்பாய் அவர்கள், மண்டலப்பொறுப்பாளர் சகோ.நர்சிங்

வர்மா, கர்க்பூர் பிரிசெப்டர் சகோ. ஏ. கே. சிங், சகோ. டி. டி. பாண்டே, சகோ. ரமாஷங்கர்தீக்ஷித் மற்று சகோ. வினோத்மோஹன்பாண்டே ஆகியோருடன் வந்திருந்து தியானக் கூடத்தைத் திறந்து வைத்தார்.

டியோரியாவின் அருகில் உள்ள மையங்களான சஹோதார்பாட்டி, லக்ஷ்மிகஞ்ச், கப்தான்கஞ்ச், பட்ரவ்னா, கஸ்யா(குசிநகர்) நடவார்காட், குகுந்த், ஜமீரா, சிஸ்வா மற்றும் கரக்பூரில் இருந்து சுமார் இருநூறு அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர்.

ஆன்மீகக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததில், நகரம் மற்றும் கிராமத்தில் உள்ள பல பெரிய மனிதர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுனர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர். முதலில், சகோ.ரமாசங்கர் தீக்ஷித் அவர்கள், ஆசிரமத்தின் கட்டிட அமைப்பைப்பற்றிப் பேசினார். ஸ்ரீராம்சந்த்ர மிஷன் நிறுவப்பட்டவிதம் பற்றியும், மாஸ்டர்களைப் பற்றிய ஒரு அறிமுக உரையும், மற்றும் மிஷனின் முக்கிய நோக்கம் பற்றியும் சகோ.வர்மா விவரித்தார். ஆன்மீகம் எதற்காக? அதன் தேவை என்ன?, மற்றும் மனக்கட்டுப்பாடும் ஒழுக்கமும், என்பவை பற்றி சகோ.வாஜ்பாய் மிகவும் எளிமையகவும், அனைவரையும் கவரும்வண்ணம் பேசினார்.

## மகராஷ்டிரா - சந்த்ராபூர் மையம் நிலம் பதிவு

சந்த்ராபூர் மையத்தில் ஒரு ஆசிரமம் கட்ட, அம்மையத்தைச் சேர்ந்த சகோ.அமர்சிங்ராதோட், மற்றும் சகோ.சுஷ்மிதாராதோட் அவர்களால், நான்கு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. நவம்பர் இருபத்து ஆறாம் தேதி அன்று, மிஷனின் கூட்டுச்செயலாளர், சகோ.ஏ.பி. துரை அவர்களால், மண்டலப்பொறுப்பாளர் சகோ.டாக்டர் சுபாஷ் வைத்யா மற்றும் மையப்பொறுப்பாளர் சகோ.எல்.கே கோயல் ஆகியோர் முன்னிலையில் அந்த நிலம் பதிவு செய்யப்பட்டது.

மிஷனின் இந்த புதிய ஆசிரம நிலத்தில் சத்சங்கம் நடைபெற்றது. அப்யாசிகளிடம் பேசிய சகோ.ஏ.பி. துரை, நன்கொடையைப் பாராட்டினார். மாஸ்டரிடத்தில் உள்ள நன்றி அவர் பேச்சில் தெளிவாகத் தெரிந்தது. நன்கொடை செய்தவர்களின் அன்பு மற்றும் தாராள மனதை அவர் வரவேற்றார். சகோதரத்துவம் வளரவேண்டும் என்றும், ஆசிரமத்தின் தன்னார்வத்தொண்டுகளில் நிறைய பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் அப்யாசிகளைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு முன்தினம், INC MBA கல்லூரியில் மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஒரு வரவேற்புக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. சுமார் நூற்றுஐம்பது பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆன்மீகத்தை நாடும் போது, நம்மிடையே இருக்கும் மிகவும் தகுதி வாய்ந்த குரு எவ்வளவு முக்கியமானவர் என்பதை சகோ.துரை விளக்கினார். சகோ.வைத்யா நமது பயிற்சி முறை பற்றி ஹிந்தியில் விவரித்தார்.



## உத்தரகாண்டில் ஒரு சுவாரசியமான பரிசோதனை



கங்கோலிஹாட், அல்மோரா மற்றும் ராணிகேத் ஆகிய இடங்களில் இருந்து, ஒரு பிரிசெப்டர் மற்றும் மூன்று அப்யாசிகள், அருகில் உள்ள சில இடங்களுக்குச் சென்று வரவேற்புக்கூட்டங்கள் நடத்தி, பிரிசெப்டர் இல்லாத இடங்களில் உள்ள அப்யாசிகளுக்கு சிட்டிங் கொடுத்தனர். குறைந்தது ஒரு புதிய மையமாவது தொடங்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இப்பயணம் மேற்கொண்டனர்.

நாங்கள் அல்மோராவில் இருந்து டிசம்பர் பதிமூன்றாம் தேதி புறப்பட்டு, முதலில் கங்கோலிஹாட் என்னும் இடத்திற்குச் சென்றோம். அது பதினைந்து அப்யாசிகள் உள்ள ஒரு புதிய மையம் ஆகும். பதினான்காம் தேதி அன்று அப்யாசிகள் குடும்பங்களில் உள்ளவர்களுக்கும், நண்பர்களுக்கும் நடத்திய வரவேற்புக்கூட்டத்தில் சுமார் நாற்பது பேர் கலந்து கொண்டனர். அடுத்த நாள், அப்பகுதியில் உள்ள 'ஜாக் ரே பஹாட்' என்ற மிக வெற்றிகரமான NGO நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு, சொற்பொழிவு ஆற்ற நாங்கள் அழைக்கப்பட்டோம். அவர்களிடம் பணிபுரிபவர்களுக்கும், கண்காணிப்பாளர்களுக்கும், கிராமத்து மக்களுக்கும், ஒவ்வொரு மாதமும் ஆன்மீகச்சொற்பொழிவுகள் ஆற்றும்படி எங்களைக் கேட்டுக் கொண்டனர்.

பதினைந்தாம்தேதி அன்று, பித்தோராகர், மற்றும் அதன் அருகில் உள்ள அப்யாசிகளைச் சந்தித்தோம். சந்தக் என்னும் இடத்தின் அருகில் ஒரு அப்யாசி சகோதரியைச் சந்தித்தோம். அவருக்கு, சமீபத்தில் தான் அறுவை சிகிச்சை மூலம் மூளையில் இருந்த கட்டியை நீக்கி இருந்தனர். தன் வீட்டிலேயே சிட்டிங் கிடைத்தது பற்றி அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். தால் என்னும் இடத்தில் சிறிது நேரம் இருந்தோம். அங்கு இரண்டு வருடங்களாகப் பயிற்சியை நிறுத்தி இருந்த ஒரு அப்யாசி சகோதரியைக் கண்டோம். ஒரு சிட்டிங் எடுத்துக்கொண்ட பிறகு, அந்த சகோதரி, திரும்பவும் தியானப் பயிற்சி தொடங்க, தீர்மானமாக முடிவெடுத்தார்.

சௌகோரி என்னும் இடத்தில் இரவு தங்கிவிட்டு, மறுநாள் விஜய்பூர் என்னும் இடத்தில், அங்குள்ள விஜய்பூர் இன்டர்மீடியட் கல்லூரியில் பணிபுரிபவர்களைச் சந்தித்தோம். அவர்களிடம் சகஜமார்கப் பயிற்சிமுறை, மற்றும் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி முறை பற்றிப் பேசினோம்.

கருட் என்னும் இடத்தை அடைந்தபோது, எங்களின் சில நண்பர்களைச் சந்தித்தோம். அவர்களில் மூன்று பேர் அன்று இரவே முதல் சிட்டிங் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தனர். அடுத்த நாள், ஏற்கனவே அப்யாசிகள் ஆகி இருந்தவர்களைக் கண்டு அறிந்தோம். இன்னும் பலர் புதிதாக சிட்டிங் எடுத்துக்கொண்டனர். எங்கள் குழு எடுத்துச்சென்ற, மிஷனின் புதிய ஒளி, ஒலி நாடா வெளியீடுகள், படங்கள், மிஷனின் புத்தகங்கள் அனைத்தையும் புதிய அப்யாசிகள் மிகவும் ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டனர்.

மாஸ்டரின் அருளாலும், ஆசியாலும், இங்குள்ள இப்புதிய மையத்தில், டிசம்பர் 21ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடந்த சத்சங்கத்தில் ஏழு உள்ளூர் அப்யாசிகள் கலந்து கொண்டனர். அல்மோரா மற்றும் ராணிகேத் பிரிசெப்டர்கள் இந்த மையத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள்.

# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1


## சிக்கிம்- ஸ்ரீ ராம்சந்த்ரா மிஷன் -ஒரு புதிய முயற்சி

சிக்கிம், காங்டாக்கில், 2008, நவம்பர் 6 முதல் 8ஆம் தேதி வரை 'தியானத்தின் மூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல்' என்ற நிகழ்சியானது, அரசாங்க ஊழியர்களுக்காக, சிக்கிம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ஸ்மிருதி அமைப்பால் நடத்தப்பட்டது. மிஷனின் பிரிசெப்டரும், விவசாயத்துறை செயலாளரும் ஆன் சகோ. ரவீந்த்ர டெலாங் IAS அவர்களால் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

துவக்க விழாவிற்கு விவசாயம் மற்றும் தோட்டக்கலை அமைச்சர் திரு.சோம்நாத் பௌட்யால் அவர்கள் பிரதான விருந்தினராகவும், MLA திரு.பீம்துங்கல் சிறப்பு விருந்தினராகவும் வந்திருந்தனர். திரு.துங்கல் அவர்கள் சிக்கிம் சமுதாயத்தின் தற்போதைய நிலைமை பற்றிய தம் ஆதங்கத்தைத் தெரிவித்தார். தற்கொலை விகிதம், அந்த மாநிலத்தில் மிகவும் அதிகமாக இருப்பதை வருத்தத்துடன் கூறினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி, சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படும் சமையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதைப் பாராட்டிப் பேசினார்.

டாக்டர். பரிப்லவி' அழுத்தம்(stress) -ஒரு மருத்துவ நோக்கு' என்பது பற்றி ஒரு உரை தொகுத்து வழங்கினார். தளர்த்துதல் (relaxation) பற்றிய செய்முறைகளை சகோ.அரூன் தாவே செய்து காட்டினார். இதை அடுத்து 'சமநிலை வாழ்க்கை' பற்றி சகோ. ஞான சரின் நிகழ்ச்சி இருந்தது. சகோ. தெலாங் சகஜ மார்க தியான முறைப் பற்றிச் சுருங்கக் கூறினார். பங்கேற்பாளர்களில் முப்பத்து நான்கு பேர், பயிற்சியைத் தொடங்க தங்கள் ஆர்வத்தைத் தெரிவித்தனர்.

இரண்டாவது நாளில் சகோ.சீதா நடத்திய 'உலகளாவிய நன்னெறிகள்' தலைப்பில் நடந்த ஒரு கலந்துரையாடல், 'மனதை ஒழுங்குபடுத்துதல்' என்பது பற்றி சகோ.சரீன் ஆற்றிய சொற்பொழிவு, மற்றும் 'மனிதனின் மாற்றம்' என்பது பற்றி சகோ.தாவே ஆற்றிய சொற்பொழிவு ஆகியவை நடைபெற்றன. இறுதியில் காண்பிக்கப்பட்ட 'மாஸ்டரின் கை ஸ்பரிசம்' என்ற ஒளி நாடா நிகழ்ச்சி வந்திருந்த அனைவரையும் நெகிழ வைத்தது.

இறுதி நாள் நிகழ்ச்சியாக, சகோ.தாவே 'நேரத்தை ஒழுங்காகப் பயன்படுத்துதல் என்பது பற்றி உரையாற்றினார். சகோ.சீதா, 'நேர்முக சிந்தனை' பற்றிப் பேசினார். நிகழ்ச்சியைப் பற்றிய தங்கள் கருத்துக்களைக் கூறிய பங்கேற்பாளர்கள், புதிய காற்றை சுவாசித்தது போலவும், அழுத்தங்களில் இருந்து விடுபட்டது போலவும் உணர்ந்ததாகத் தெரிவித்தனர். இதனால் ஏற்பட்ட பாதிப்பானது, அவர்களிடம் நல்ல மாற்றங்கள் பலவற்றைக் கொண்டு வரும். சிட்டிங் எடுத்துக் கொண்ட பிறகு, மிகவும் இலேசாக இருப்பது போல் உணர்ந்ததாகப் பலரும் கூறினர்.

## என்னில் இருந்து அவராக ஏற்படும் உள் மாற்றம்

டிப்டூர்-13 மற்றும் 14 ந்தேதி டிசம்பர் 2008

தன் நிலை மாற்றம் ஏற்பட்டு, வாழ்வின் லட்சியமான, மனித பூரணத்துவம் அல்லது தெய்வத்தன்மை அடைய, சகஜ மார்க்கம் ஒரு சிறந்த வழி என்று மாஸ்டர் அடிக்கடி வலியுறுத்திக் கூறியுள்ளார். நம் சாதனாவின் பல்வேறு அம்சங்களான, தியானம், சுத்திகரிப்பு முதலியவை, இந்த லட்சியத்தை அடைய உதவும் சாதனங்களாக உள்ளன. இந்த நோக்கத்திற்காக, டிப்டூர் புதிய ஆசிரமத்தில், இரண்டு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

சுமார் 40 அப்யாஸிகள் டிப்டூர், ஹாஸன், தும்கூர், ஷிமோகா, பத்ராவதி ஆகிய இடங்களிலிருந்து பங்கேற்றனர். முதல் நாள் சத்சங்கத்தைத் தொடர்ந்து, சகோ.சுப்ரமண்யா, சகோ.சீனிவாசா, "ஆன்மீகமும் மதமும்" மற்றும் "மாஸ்டரின் முக்கியமும் பங்கும்" என்ற தலைப்பில் பேசினார்கள். எங்களுக்கு, இந்த உரைகள், எங்களை கேள்வி கேட்க வைத்தன: எதற்காக நாம் எல்லோரும் இங்கிருக்கிறோம்? இதில் மாஸ்டரின் பங்கு என்ன? முக்கிமாக, இதில், நம்முடைய பங்கு என்ன? பயிற்சிக்கு விருப்பம் மட்டுமே போதுமா?

சகோ.மஞ்சுளாவின் "நல்லொழுக்கம் அமைத்தல்" (character formation) என்ற உரை, நாம் என்ன செய்யவேண்டும் என்பதை உணர்த்தியது. நம்மை ஊக்குவித்து, நாம் என்னவாக ஆக வேண்டுமோ, அதற்கு என்ன செய்யவேண்டும் எனபதைப்பற்றி தீவிரமாகச் சிந்திக்கவைத்தது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும், சகஜ மார்க்க சாதனைகள் பற்றியவைகளாக இருந்தன. தியானம், சுத்திகரிப்பு, மற்றும் பிரார்த்தனை போன்ற பல்வேறு அம்சங்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டன. அப்யாசிகளுக்கு எழுந்த அனைத்துக் கேள்விகளும் தெளிவாக்கப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியில், 'நானும் என் மாஸ்டரும்' என்ற கலந்துரையாடல் பகுதியில், பல அப்யாசிகள் மாஸ்டருடன் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவை எல்லாம் மனதை நெகிழ வைத்தன. மேலும் மாஸ்டரை முதல் தடவையாகப் பார்க்கப்போகும் அப்யாசிகளுக்கு, மிகுந்த ஊக்கம் அளிப்பவையாக இருந்தன. மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. இந்த இரண்டு நாளும் கற்றுக் கொண்ட விஷயங்கள் பற்றி மேலும் மேலும் சிந்தித்து, அவற்றை வாழ்க்கையில் பிரயோகிக்கும் தீர்மான எண்ணத்துடன் நாங்கள் எங்கள் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றோம்.





## மகராஷ்டிரா, கோவா - பிரிசெப்டெர்கள் கூட்டம்

2008, நவம்பர் 14 முதல் 16 வரை, பன்ஷெட்டில் உள்ள பூனா புத்துணர்வு மையத்தில், மகராஷ்டிரா மண்டல பிரிசெப்டெர்களுக்கான ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

நாற்பது சகோதர, சகோதரி பிரிசெப்ட்ர்கள் பங்கேற்றனர். மண்டலப்பொறுப்பாளர் டாக்டர். சுபாஷ் வைத்ய நவம்பர் பதினைந்தாம் தேதி கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். காலை நிகழ்ச்சியில், குரு வந்தனா (அதாவது, நம் மூன்று மாஸ்டர்களின் பணிகள்) மற்றும் நமது சகஜ மார்க்க சாதனா பததி ஆகிய இரண்டு தலைப்புகள் பற்றிப் பேசப்பட்டன. பிற்பகல் நிகழ்ச்சி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை, ஆன்மீகத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு சகஜ மார்க்கத்தை அறிமுகப்படுத்துதல், ப்ரிசெப்டர் பணி மற்றும் ஆசிரமப்பணிகளில் பிரிசெப்டர்களின் பங்கு, மற்றும் அப்யாசிகளுக்கு சிட்டிங் கொடுப்பது போன்றவை ஆகும்.

நவம்பர், பதினாறாம் தேதி காலை நிகழ்ச்சியில், பிரிசெப்டர் அப்யாசிகளுக்கு இடையே உள்ள தொடர்பு, ஒழுக்கக்கோட்பாடுகள், நிர்வாகப்பணிகள் மற்றும் மிஷன் சம்பந்தப்பட்ட கணக்குகளைப் பராமரிப்பது போன்ற பல விஷயங்கள் பேசப்பட்டன.

ஆன்மீகம் மற்றும் நிர்வாகப் பணிகளில் தங்கள் பங்கு என்ன என்பதை அறிந்து கொள்ள இந்த கூட்டம் உதவியதாக அனேக பிரிசெப்டர்கள் தெரிவித்தனர். புதிதாக நியமிக்கப்பட்ட பிரிசெப்டர்கள், சிட்டிங் கொடுப்பது பற்றிய தங்களின் எல்லா சந்தேகங்களுக்கும், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே விடைகள் கிடைத்ததாகக் கூறினர். தாங்கள் முன்பே வினாக்களைக் கேட்டு, அதற்கேற்ற பதில்கள் வருவதுபோல் பொதுவாக அனைவருமே உணர்ந்தனர். இதிலிருந்து, மாஸ்டர் தனக்காகச் செயல்புரிபவர்களை எவ்வாறு அன்புடன் கண்காணித்து வருகிறார் என்பது தெரிகிறது. நமது நேர்மையான பணிகளால் ஏற்படும் மட்டற்ற மகிழ்ச்சியினை அவருக்கு அளிக்க நாம் அனைவரும் முழுமுச்சுடன் செயல்புரிவோம்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1

## கல்விக்கழக வளாகத்தில் முதல் முயற்சி

ஜோத்பூர், ராஜஸ்தான்






ஜோத்பூர் மையமானது, சகஜ மார்க்கத்தைப் பற்றிய தொடர் சொற்பொழிவுகளை நவம்பர் ஆறாம் தேதி முதல் ஒன்பதாம் தேதி வரை பல்வேறு ஸ்தாபனங்களிலும் ஏற்பாடு செய்திருந்தது. லால்பகதூர்சாஸ்திரி பொறிஇயல் மற்றும் ஆராய்ச்சி மையம், மார்வார் பொறிஇயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், (சுமார் நூற்று ஐம்பது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 'விஞ்ஞானமும் ஆன்மீகமும்' என்பது பற்றி), டவுன் ஹால் (ஆன்மீகம்-குறிக்கோளுடன் உள்ள வாழ்க்கை வாழ ஒரு வழி-அறுநூறு பங்கேற்பாளர்கள்), ஜெய்நரேன்வியாஸ் யூனிவர்சிடி எக்ஸ்டென்ஷன் லெக்சர் செல்(யோகமும் சகஜ மார்க்கமும்-நூற்று ஐம்பது ஆசிரியர்கள்), மற்றும் நேஷனல் லா யூனிவர்சிடி(சட்டமும் ஆன்மீகமும்-நூற்று ஐம்பது மாணவர்களும் ஆசிரியர்களும்) ஆகிய இடங்களில் சொர்பொழிவுகள் நடைபெற்றன.

சென்னை, சகஜ மார்க்க இயக்குனரான சகோ.டாக்டர் கே, எஸ் பாலசுப்ரமணியம் பேசுகையில், ஆன்மீகமானது, மனிதர்களால் உருவாக்கப்பட்ட செயற்கையான தெய்வங்களுக்கு பெயர்களோ, குணங்களோ கொடுப்பதில்லை என்றும், அவர்களுக்கு கீழ்படிதலுடன் இருக்கும்படியாகக் கட்டாயப்படுத்தவில்லை என்றும், ஆனால், மனிதனின் எண்ணங்களை, பெயர், உருவம், குணம் அற்ற, முடிவில்லாத, அனைத்து உயிர்களுக்கும் முதலான் ஆதிமூலத்தை நோக்கி ஒருமுகப்படுத்துகிறது என்றும் கூறினார். பரம்பொருளை நோக்கும் இத்தகைய ஒரு முறையானது, பல்வேறு நாடுகள், மதங்களைச்சேர்ந்த, அனைத்து மனிதர்களையும் ஒன்று சேர்த்து, இன்றைய உலக நிலையில் மிகவும் தேவையான, மனிதவாழ்க்கையின் முக்கியமான அடிப்படை அம்சமான ஒருமைப்பாட்டை வளர்க்கும், ஒருங்கிணைக்கும் சக்தியாக இருக்கமுடியும். பரம்பொருளை அடைய உதவும் இந்த எளிமையான முறையில், ஆன்மீகமானது மிகப்பரவலாக பயிற்சி செய்யப்பட்டால், அதுதான், ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கும் மிக வீரியமுள்ள சகதியாக இருக்கும். சுமார் பத்து, பன்னிரண்டு சகோதர, சகோதரியர் சேர்ந்து, பயிற்சி ஆரம்பித்துள்ளனர். அது ஒரு நல்ல ஆரம்பமாக உள்ளது.

## குஜராத்தில் பரிமாற்ற நிகழ்ச்சி

அநேக சிறிய மையங்களில் உள்ள அப்யாசிகளுடன், புதிதாக சிலர் வந்து கலந்து பேசுவது அவசியம் என்று உணரப்பட்டது. பேச்சு வார்த்தைகளுக்குப்பின், அப்யாசிகள் பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, A மையத்தில் உள்ள அப்யாசிகள் அனைவரும் B மையத்திற்குச் சென்று அங்கு அரை நாளாவது ஒன்றாக இருக்கவேண்டும். வரவேற்கும் மையத்தில் உள்ளவர்களுக்கு இது ஆர்வமும், ஊக்கமும் அளிப்பதாக இருந்தது. அடுத்த இரண்டு மாதங்களில் B மையத்தின் அப்யாசிகள் A மையத்திற்குச் செல்வர்.

அப்யாசிகள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும்போது, எண்ணங்கள், திட்டங்களின் பரிமாற்றம் ஏற்படுவதுடன் ஒரு தெளிவும் பிறக்கிறது. இரண்டு மையங்களிலும் உள்ள நல்ல பழக்கங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அப்யாசிகள் குழுக்களாக பக்கத்து மையங்களுக்கு பயணப்படும்போது, சகோதரத்துவம் நிலை நாட்டப்படுகிறது.

இம்மாதிரியான ஒரு கூட்டம், வாபியில் இருந்து இருபத்தைந்து கி.மீ. தொலைவில் உள்ள டாமன் என்னும் இடத்தில் நடந்தது. சில்வாசா (ஒரு சாடிலைட் மையம்) மற்றும் வாபியில் இருந்து வந்திருந்த அப்யாசிகள் ஒரு முழு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்த மையங்கள், தெற்கு குஜராத்தில், சூரத் மற்றும் மும்பாயின் நடுவே அமைந்துள்ளன. இந்த பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடக்கும் இடங்களில், கண்டிப்பாக, சிநேகமனப்பான்மை அதிக அளவில் காணப்பட்டது. அந்த மையத்தின் வளர்ச்சிக்கு அது வழிகாட்டியாக இருக்கும்.

## கூட்டு படிப்பு குழுக்கள்- பாலியா மையம்



ஸ்மிருதி வெளியிட்டுள்ள கூட்டுப் படிப்புக்கான குறிப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், எங்கள் மையத்தில், ஒவ்வொரு ஞாயிறு அன்றும் சத்சங்கம் முடிந்தவுடன் ஒரு மணி நேர நிகழ்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டது. நான்கு முதல் ஐந்து குழுக்களும், ஒவ்வொரு குழுவில் இருந்தும் பிரநிதியாக ஒரு பேச்சாளரும் தேர்ந்தெடுத்தோம். அவர்கள் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை ஒரு வாரம் படித்துவிட்டு வந்து, பேசவேண்டும். மாஸ்டரின் உபதேசங்களின்படி, ஆன்மீக மற்றும் பௌதீக விளக்கங்கள் அனைத்தும் இருக்கும்படி, இந்த குறிப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. நவம்பர் 2008 இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் பங்கேற்றுள்ள பல இளைஞர்களிடம் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிந்தது. அவர்கள் அனைவரும் மாலை வேளைகளில் புத்தகங்களைத் தேடிப் படிப்பதும், அடுத்த வகுப்புக்கான சொற்பொழிவைத் தயாரிப்பதுமாக, மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டனர்.

முதலில் சிறிது தயக்கம் இருந்தபோதிலும், இரண்டு வாரங்களுக்குப்பிறகு, தாங்கள் பேசவில்லை என்பதையும், மாஸ்டர் தான் அவர்கள் மூலமாகப் பேசுகிறார் என்றும் உணர்ந்தனர். இது, நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த மாஸ்டர் கொடுத்துள்ள ஒரு வாய்ப்பாக உள்ளது. இல்லாவிடில் அந்த நேரம் முழுவதும் விரயம்தான் ஆகியிருக்கும். ஒவ்வொரு அப்யாசியும் தங்களிடத்தில் ஏற்படும் மாற்றங்களைக்கண்டு அதிசயித்தனர். இது மாஸ்டர் மீது நம்பிக்கையையும், அன்பையும் வளர்க்கிறது. ஒரு வாரம் வகுப்பு நடந்தது. அடுத்த வாரம், சத்சங்கம் முடிந்த பிறகு, நேரம் இல்லாதவர்கள் போகலாம் என்று அறிவித்த பிறகும், சத்சங்கத்திற்கு வந்திருந்த அனைவருமே வகுப்பு நடந்த போது தங்கி, பங்கேற்றவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளுதல், பொறுத்துக்கொள்ளுதல், மன்னித்தல், அன்புசெலுத்துதல், ஆகியவைகளை எங்களுக்கு ஆசீர்வதிக்கும்படியும், அவைகளைப் பெற்றுக்கொள்ளும் திறனை அருளும்படியும் பிரார்த்திக்கிறோம்.

## புதுடில்லி, NSIC யில் நடந்த வரவேற்புக்கூட்டம்

2008 டிசம்பர் நான்காம் தேதி, புதுடில்லி, ஒக்லா தொழிற்பண்ணையில் உள்ள, தேசிய சிறு தொழில் சங்கம் அலுவலகத்தில் ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் பெரிய பதவியில் உள்ள சிலர் உட்பட நாற்பத்தைந்து பேர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்காக எடுத்துகொள்ளப்பட்ட விஷயம், 'சமநிலை வாழ்க்கைக்கு தியானம்' என்பதாகும். சகோ. எ.பி.பால்டா சுருக்கமான துவக்க உரையாற்றி பேச்சாளர்களை அறிமுகப்படுத்தினார். சகோ.ஞான் சரீன் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பைப் பற்றி ஹிந்தியில் பேசினார். சகோ.ஷோபனா மேற்கூறிய விஷயத்தைப் பற்றி சுருக்கமாகப் பேசிவிட்டு, தியான முறை பற்றி விரிவாகப்பேசினார். இதை அடுத்து ஒரு வினா விடைப் பகுதி நடை பெற்றது.



SHRI RAM CHANDRA MISSION®
ECHOES INDIA
January 2009 For Private Circulation Only Volume 2 Issue 1

## யோகாசிரமம்- திருப்பதி

இரண்டரை ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள திருப்பதி மையம் தான் நமது மிஷனின் முதல் ஆசிரமம் என்பது விசேஷமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். பாபுஜி மகராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1965ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த ஆசிரமம், சீராக வளர்ந்து வருகிறது. திருமலை குன்றுகளும், கபில தீர்த்தம் என்ற அருவியும் பின்னணியாக நிற்கும் ஒரு அழகான இடத்தில் ஆசிரமம் அமைந்துள்ளது.

இந்த மையத்தின் முதல் பிரிசெப்டரான டாக்டர் கே.சி. வரதாச்சாரி அவர்களின் கீழ், இங்குள்ள அப்யாசிகள் சிறந்த ஆன்மீகப்பயிற்சி பெற்றனர். ஆசிரமம் ஆரம்பித்ததில் இருந்து ஒவ்வொரு வருடமும், பாபுஜி மகராஜ் அவர்கள், தன் தென்னிந்தியப் பயணத்துடன் இணைத்து, இங்கு வருகை புரிவது வழக்கம். திருப்பதி மையத்தின் வெள்ளி விழா 1990 டிசம்பர் மாதம் கொண்டாடப்பட்டது. அச்சமயம் மாஸ்டர் விழாவில் பங்கேற்று அப்யாசிகளை ஆசீர்வதித்தார்.

டாக்டர்.சி.ராஜேஸ்வரி அவர்களால் 1965ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்துடன் மையம் ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து சீராக விரிவடைந்துள்ளது. புதிய தியானக்கூடம், 1994ஆம் ஆண்டு மாஸ்டரால் திறந்துவைக்கப்பட்டது. அங்கு சுமார் ஆயிரம் அப்யாசிகள் அமரலாம்.

டிசம்பர் 1984ஆம் ஆண்டு முதன் முதலாக, திருப்பதியில், சகஜ மார்க்க ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. தற்சமயம் இந்த மையத்தில் 900 அப்யாசிகள் உள்ளனர். பல்வேறு நிகழ்ச்சிகளும் முறையாக நடைபெற்று வருகின்றன.

சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு நூலகம் ஆசிரமத்தில் உள்ளது. எல்லா நாட்களிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். மிஷன் புத்தகங்களைப் படிப்பதற்கு, அநேக அப்யாசிகள் நூலகத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகின்றனர். குழந்தைகளுக்கான, விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளில், மிஷனில் சேர விரும்பும் ஆர்வத்துடன் வருபவர்களுக்கு, மிஷன் பற்றியும், பயிற்சி முறை பற்றியும் விளக்கப்பட்டுகிறது. அப்யாசிகள் பலரும், தன்னார்வத்தொண்டு புரிந்து, ஆசிரமத்தின் பல்வேறு வேலைகளையும் கவனித்துக்கொள்கின்றனர்.


Meditation Hall


Library


Driveway

From the Archives




First Building


Children's Area

**To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
**For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2008 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This Newsletter is intended exclusively for the members of SRCM.